**ஹிங்குரக்கொட பிரதேச சபை**
**பொலன்னறுவை மாவட்டம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2016 ஏப்ரல் 04 ஆந் திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2015 ஏப்ரல் 01 ஆந் திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2016 ஆகஸ்ட் 23 ஆந் திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

### 1.2 அபிப்பிராயம்

இவ்வறிக்கையின் 1.3 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் ஏற்படுத்தும் தாக்கங்கள் தவிர, நிதிக்கூற்றுக்களில் 2015 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ஹிங்குரக்கொட பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அவற்றின் நிதிச் செயற்பாடுகளும் காசுப்பாய்ச்சல் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமை ஒன்றினை வெளிப்படுத்துகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) நிலையான சொத்துப் பதிவேட்டில் பதிவுகள் செய்யப்பட்டிருந்த போதிலும், 29 காணிகள் மற்றும் அவற்றோடு சேர்ந்த கட்டிடங்களின் பெறுமதியை பெறுமதி மதிப்பீடு செய்து நிதிக்கூற்றுக்களில் உட்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நிலையான சொத்துக்கள் பதிவேட்டில் பதிவு செய்யப்பட்டிருந்த போதிலும் 05 நீர்ச் செயற்திட்டங்களை சேர்ந்த 05 நீர் மோட்டார்களின் பெறுமதி மற்றும் உயிர்வாயு உற்பத்தி செய்யும் தொகுதி என்பன பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு நிதிக்கூற்றுக்களுக்கு எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்திருந்த டிரக்டர் வண்டி ஒன்று, இயந்திரங்கள் மற்றும் உபகரண 27 தொகுதிகள் மற்றும் 2 பிளாஸ்டிக் மேசைகள் மற்றும் எழுதுனர் மேசை ஒன்றின் பெறுமதியாகிய ரூபா 350,430 இனை நிதிக்கூற்றுக்களுக்கு உட்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஈ) உள்நாட்டுக் கடன்கள் மற்றும் அபிவிருத்தி நிதியத்திலிருந்து பெற்றிருந்த மூன்று கடன்களுக்கான தவணைப் பணம் மற்றும் வட்டித்தொகையினை சபை செலுத்தத் தவறியமையினால் கடன் வழங்கிய நிறுவனத்தினால் குறிப்பிட்ட கடனை மீள் ஆவணப்படுத்தலின் போது மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு அந்நிறுவனத்திற்கு கிடைக்க வேண்டிய தொகை ரூபா 49,018,430 என வெளிப்படுத்தப்பட்டிருந்ததுடன் சபையின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு பொறுப்புக்கள் ரூபா 31,127,842 தொகை காட்டப்பட்டிருந்தமையால் நடைமுறை பொறுப்புக்கள் ரூபா 17,890,588 இனால் குறைவாகக் காட்டப்பட்டிருந்தது.

#### 1.3.2 கணக்கீட்டுக் கொள்கைகள்

நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் போது சபையினால் கடைபிடிக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளின் சுருக்கமொன்று அடங்கிய குறிப்பு நிதிக்கூற்றுக்களுடன் வெளிப்படுத்தியிருக்கவில்லை.

**1.3.3 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணக்கமின்மைகள்**

கீழே காணப்படும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் இணக்கமின்மை சந்தர்ப்பங்கள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் தொடர்பு | இணக்கமின்மைகள் |
|---|---|---|
| (அ) | 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டம் | |
| | 150(1), 152(1) மற்றும் 153(1) ஆம் பிரிவுகள் | கைத்தொழில்கள், வர்த்தகங்கள், திறந்தொழில் மற்றும் அபிவிருத்தி செய்யப்படாத காணிகள் தொடர்பாக அட்டவணை தயாரிக்கப்பட்டு, ஆண்டின் மார்ச் 31 திகதி அல்லது அதற்கு முன்னர் சபையின் செயலாளருக்கு சமர்ப்பித்திருக்கவில்லை. |
| (ஆ) | 1988 பிரதேச சபை (நிதி மற்றும் நிருவாக) விதிக் கோவை | |
| | விதி 218 | சபைக்குச் சொந்தமான அனைத்துக் காணிகள் மற்றும் கட்டிடங்களும் வருடாந்தக் கணிப்பீடு மேற்கொள்ளப்பட வேண்டும். எனினும் சபையினால் எவ் ஆண்டிலும் அவ்வாறான கணிப்பீடு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபனக் கோவை | |
| (i) | அத்தியாயம் XXIV பிரிவு 4 | ஓய்வுபெற்ற, இறந்த 20 உத்தியோகத்தர்களிடம் 15 முதல் 25 வருடங்களுக்கு இடைப்பட்ட காலம் முதல் ரூபா 302,394 தொகையொன்று அறவிடப்பட வேண்டியிருந்தது. |
| (ii) | அத்தியாயம் XXIV உப பிரிவு 4.5 | 1980 ஆம் ஆண்டு முதல் 2008 ஆண்டு வரையான காலப் பகுதியில் சேவையை விட்டுச் சென்றுள்ள 16 உத்தியோகத்தர்களிடம் அறவிடப்பட வேண்டிய ரூபா 183,645 தொகையினை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |

(ஈ) சுற்றறிக்கைகள்

| | | |
|---|---|---|
| (i) | 2005 நவம்பர் 08 திகதிய மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி அமைச்சுச் செயலாளரின் உள்ளூராட்சி மறுசீரமைப்பு சுற்றறிக்கையின் பந்திகள் 3.1 மற்றும் 3.2 | சபைக்குச் சொந்தமான 93 காணிகள் தொடர்பாக அளவைகள் மேற்கொள்ளப்பட்டு காணி மற்றும் அதில் அமைந்துள்ள கட்டிடங்கள் சட்டரீதியாக பிரதேச சபைக்கு உரித்தாக்குவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |
| (ii) | 2002 திசெம்பர் 09 ஆந் திகதிய வட மத்திய மாகாண பிரதான செயலாளரின் இலக்கம் என்சீபீ/2002/11 கொண்ட மாகாண திறைசேரியின் சுற்றறிக்கையின் பந்தி 04 | 2015 திசெம்பர் 31 திகதி அளவில் இடமாற்றம் பெற்றுச்சென்றிருந்த 19 உத்தியோகத்தர்களிடம் அறவிடப்பட வேண்டிய ரூபா 331,016 தொகைக்கான கடன் மீதியை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |
| (iii) | 1980 திசெம்பர் 31 திகதிய 1980/46 ஆம் இலக்க உள்ளூராட்சி ஆணையாளரின் சுற்றறிக்கை | குறைந்த பட்சம் 5 வருடங்களுக்கு ஒரு முறை கடை வாடகை திருத்தப்பட்டு அதன் பிரகாரம் கட்டணம் அறவிடப்பட வேண்டும். எனினும், அவ் ஆலோசனைகளின் பிரகாரம் செயற்படாமல் முறைசாரா அடிப்படையில் கடை வாடகை அறவிடப்பட்டிருந்தது. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் படி 2015 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 689,653 தொகையாகக் காணப்பட்டதுடன் அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 5,289,651 ஆகும்.

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 வீத வரி

(அ) மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு 06 அரச நிறுவனங்களில் இருந்து கிடைக்க வேண்டிய நிலுவை வீத வரி ரூபா 362,953 தொகை 2 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் முதல் அறவீடு செய்வதற்காக சபையினால் எதுவித நடவடிக்கையும் எடுத்திருக்கவில்லை.

(ஆ) வீத வரி செலுத்த வேண்டிய 149 பேரிடம் அறவிடப்பட வேண்டிய ரூபா 802,291 தொகையொன்று 03 வருடம் முதல் 10 வருடங்களை விட கூடுதலான காலம் முதல் நிலுவையாகக் காணப்பட்டதுடன், அப் பணத்தை அறவீடு செய்வதற்காக சபையினால் போதிய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.2 ஏனைய வருமானங்கள்

(அ) சபைக்குச் சொந்தமான 07 நீர்த்திட்டங்களில் இருந்து 1-3 வருட இடைப்பட்ட காலத்தில் அறவிடப்பட வேண்டிய ரூபா 294,597 இற்கான நிலுவை நீர்க்கட்டணத்தை அறவீடு செய்வதற்காக சபையினால் நடவடிக்கை ஏதும் எடுத்திருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டு இறுதியளவில் மலசல வடிகாலமைப்பு முறைமை தொடர்பாக ரூபா 243,442 தொகையொன்று அறவிடப்பட வேண்டியிருந்ததுடன் அவற்றில் ரூபா 175,290 தொகை 26 வதிவிடங்கள் தொடர்பானவை 2 முதல் 3 வருடங்கள் வரையான காலப்பகுதியில் அறவிடப்படாமல் காணப்பட்டது.

(இ) 2015 ஆண்டு முதல் புதிய பெறுமதி மதிப்பீட்டின் பிரகாரம் வாடகை மற்றும் முன்னைய மாதத்தின் போது நிலுவை வாடகை உட்பட 40 கடைகளில் இருந்து 06 மாதங்களை விட கூடிய காலத்திற்காக ரூபா 618,023 இற்கான நிலுவை வாடகையினை அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஈ) வருமானம் உழைக்கும் விடயங்களுக்காக பயன்படுத்தப்பட்ட 06 வாகனங்களில் இருந்து மீளாய்வாண்டு இறுதி அளவில் ரூபா 447,110 தொகையொன்று அறவிடப்பட வேண்டியிருந்ததுடன் அதனை அறவீடு செய்வதற்காக நடவடிக்கை ஏதும் எடுத்திருக்கவில்லை.

(உ) ஹிங்குரக்கொட நீதிமன்ற வளவில் நிர்மாணிக்கப்பட்டிருந்த 16 சட்டவரைஞர் அலுவலகங்களில் இருந்து அறவிடப்பட வேண்டியிருந்த தொகை ரூபா 3,465,325 இற்கான கேள்வி வாடகை தொகை 02 வருடங்களுக்கு மிகையான காலம் முதல் நிலுவையாகக் காணப்பட்டதுடன், அவற்றை அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஊ) சட்டவரைஞர்கள் பயன்படுத்தும் 16 கடைகளில் இருந்து 2014 மற்றும் 2015 ஆண்டுகளிலும் அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா 192,000 தொகையினை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(எ) சபைக்குச் சொந்தமான 80 கடைகள் தொடர்பாக வாடகை 2014/2015 ஆண்டின் போது பெறுமதி மதிப்பீட்டுத் திணைக்களத்தினால் மதிப்பீடு செய்யப்பட்டு சபைக்கு ஒப்படைக்கப்பட்டிருந்த போதிலும், அவ்வாடகையை கடை வாடகையாளர்களினால் கொடுப்பதற்கு மறுத்ததினால் மாதாந்த ரூபா 67,225 தொகைக்கான கடை வாடகை வருமானத்தை சபை இழந்திருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவத் திறமையின்மை

(அ) 2014 நவம்பர் மாதத்தில் பொது மக்களின் பயன்பாட்டிற்காக மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி அமைச்சில் இருந்து சபைக்கு வழங்கியிருந்த 624 கல்வணய்ஸ் குழாய்களில் இருந்து 256 ஜீ.ஐ. குழாய்கள் முறைசாரா விதமாக எலஹர பிரதேச சபைக்கு வழங்கப்பட்டிருந்ததுடன் 108 குழாய்கள் பிரதேச சபை மந்திரிமார்களினால் எடுத்துச் செல்லப்பட்டிருந்ததுடன் அந்த 364 குழாய்களைத் திருப்பிப் பெற்றுக்கொள்வதற்காக சபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) பிரதேச சபை நிதியத்தில் இருந்து ரூபா 76,000 தொகையினை செலவிடப்பட்டு 2010 ஜூன் மாதத்தில் கொள்வனவு செய்திருந்த லப்டொப் கணனி சபையின் தலைவர் என்ற வகையில் 2010-2014 காலப்பகுதியில் சேவையாற்றிய தலைவரினால் தனிப்பட்ட பாவனைக்காக எடுத்துச் செல்லப்பட்டிருந்ததுடன் அதனை சபைக்கு திருப்பிப் பெறுவதற்கு நடவடிக்கை ஏதும் எடுத்திருக்கவில்லை.

(இ) அரிசி மாவை சேர்ந்த உற்பத்தி உபகரணத் தொகுதி 2009 ஆண்டின் போது உடன்படிக்கை ஒன்று இன்றி வெளிசாரார் ஒருவருக்கு வழங்கியிருந்ததுடன், சுமார் ரூபா 21,500 தொகை நிலுவை வாடகை தவணை மற்றும் இயந்திரத்தை திருப்பி எடுப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஈ) அலுவலக உத்தியோகத்தர்களின் உள்வருதல் மற்றும் வெளிச்செல்லல் நேரங்களைப் பதிவு செய்யும் விரல் அடையாளம் பதியும் இயந்திரம் பலவருட காலமாக விளைவற்று காணப்பட்டதுடன் புதிய இயந்திரம் ஒன்று கொள்வனவு செய்வதற்கு அல்லது தற்போது காணப்பட்ட இயந்திரத்தை திருத்துவதற்க பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர்கள் கவனம் ஏதும் செலுத்தியிருக்கவில்லை.

(உ) அலுவலக உத்தியோகத்தர்களில் உள்வருதல்/ வெளிச்செல்லல் பதிவேட்டில் வெளிச்செல்லும் நேரங்கள் பல சந்தர்ப்பங்களில் பிழையான முறையில் மாற்றப்பட்டு காணப்பட்டதுடன் தொடர்ந்து காணப்படும் இவ்விடயத்தை தடுப்பதற்காக முகாமையினால் நடவடிக்கைகள் ஏதும் எடுத்திருக்கவில்லை.

## 3.2 சுற்றாடல் சார் சிக்கல்கள்

(அ) பல வருட காலம் முதல் சபையின் அதிகாரப் பிரதேசத்தில் நாளாந்தம் சேகரிக்கப்படும் குப்பைகளை ரொடவெவ கிராம அலுவலர் பிரிவில் அமைந்துள்ள 7 ஏக்கர் தரைப்பகுதிக்கு திறந்த நிலையில் குவிக்கப்படுகின்றதுடன் அதன் காரணமாக அப்பகுதி முழுவதும் மிகவும் துர்நாற்றம் வீசுவதுடன் பொலிதீன் மற்றும் பிளாஸ்டிக் கழிவுப் பொருட்கள் அப்பகுதி முழுவதும் பரந்து காணப்படுவதால் பாரிய சுற்றாடல் அழிவு ஒன்று ஏற்படுகின்றது என அவதானிக்கப்பட்டது.

(ஆ) ஹிங்குரக்கொட பிரதேச சபையின் கழிவு பவுஸரை பயன்படுத்தி ஹபரண அடவியில் கல்ஓயா காப்புக் காட்டிற்கு 2011 ஆண்டு முதல் தொடர்ந்து மலசலம் விடுவிக்கப்படுவதுடன் அதற்காக வனப்பாதுகாப்பு திணைக்களத்தில் இருந்து எழுத்துமூலம் அங்கீகாரம் பெற்றிருந்த போதிலும் திறந்த வெளி ஒன்றில் மலசலங்கள் குவிக்கப்படுவதினால் சுற்றாடல் சிக்கல்கள் ஏற்படக் கூடிய சந்தர்ப்பங்கள் காணப்படுவதாக அவதானிக்கப்பட்டது.

## 3.3 மனித வள முகாமைத்துவம்

(அ) இரண்டாம் தர சம்பளத் தொகுதியை சேர்ந்த 02 வருமான நிருவாகப் பதவிகள், ஆரம்ப சம்பளத் தொகுதியைச் சேர்ந்த 04 பதவிகளும் வெற்றிடமாக காணப்பட்டிருந்ததுடன் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினை மிகைத்து ஆரம்ப தரத்தில் 11 பேர் சேவையில் ஈடுபட்டிருந்ததுடன் அவர்களின் சம்பளம் மற்றும் ஏனைய படிகளை மீளாய்வாண்டின் போது ரூபா 4,370,388 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) உள்ளுராட்சி ஆணையாளரின் அங்கீகாரம் இன்றி அமைய மற்றும் ஒப்பந்த அடிப்படையில் 2014 மற்றும் 2015 ஆண்டுகளின் போது 23 பேர்கள் சபைக்கு சேர்த்துக்கொள்ளப்பட்டிருந்ததுடன் அவர்களுக்காக மீளாய்வாண்டின் போதும் சம்பளம் மற்றும் ஏனைய படிகளாக ரூபா 6,033,718 தொகை ஒன்று செலுத்தப்பட்டிருந்தது.

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

---

### 4.1 செயல்நடவடிக்கைத் திட்டம்

---

2014 பெப்ரவரி 17 ஆந் திகதியில் 01/2014 இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 04 ஆம் பந்தியின் பிரகாரம் நீண்டகால தூரநோக்குடன் பிரதேச சபை சட்டத்தில் குறிப்பிட்டுள்ள குறிக்கோள்களை அடையும் இலக்காகக் கொண்ட செயற்பாடுகளை அடங்கிய வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டமொன்று மீளாய்வாண்டிற்காக தயாரித்திருக்கவில்லை.

### 4.2 உள்ளக் கணக்காய்வு

---

வட மத்திய உள்ளூராட்சி ஆணையாளரின் 2015 மார்ச் 18 ஆந் திகதிய இலக்கம் 04/2015 கொண்ட சுற்றறிக்கையின் 6 ஆம் பந்தியின் பிரகாரம் நேரடியாக பொறுப்புச் சொல்ல வேண்டிய உள்ளகக் கணக்காய்வு உத்தியோகத்தர் ஒருவர் சபைக்கு நியமிக்கப்பட்டிருக்கவில்லை.

### 4.3 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு

---

கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு நியமிக்கப்பட்டு செயற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

### 4.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

---

**விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்படும் சொத்துக்கள்**

---

அலுவலக வளவில் 5 வருடங்களை விட மிகையான காலம் முதல் தடுத்து வைக்கப்பட்டுள்ள மிட்சுபிசி கப் வண்டி, போட் டிரக்டர் வண்டி மற்றும் நான்கு சில்லு டிரக்டர் வண்டி என்பன இயற்கை அனர்த்தங்களுக்கு ஆளாகி அழிந்த நிலையில் உள்ளதாக அவதானிக்கப்பட்டது.

## 5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

---

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பரப்புகள் தொடர்பாக விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) உள்ளகக் கட்டுப்பாடு
(இ) வருமான நிருவாகம்
(ஈ) கடன்பட்டோர், கடன்கொடுத்தோர் கட்டுப்பாடு
(உ) சொத்துக்கள் முகாமைத்துவம்
(ஊ) திண்மக் கழிவுப் பொருள் முகாமைத்துவம்